மாண்புமிகு மேலவைத் தலைவர் : எந்தக் கட்சியைப் பற்றியும் அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : நம் மாநிலத்தில் மதுவைக் குடிப்பதற்கு பெர்மிட்டுகள் தாராளமாக வழங்கப்படும் இந்தக் காலத்திலே கூட கள்ளச் சாராயத்தை மக்கள் மோகமாக விரும்பிக் குடிப்பதற்குக் காரணம் அதிலே போதை அதிகமாக இருக்கிறது என்பதுதான் என்று சொல்லுகிறார்கள். அதுபற்றி அமைச்சர் அவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : அனுபவம் இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரியார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் அவைக்கு வாராதது குறித்து.

* திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, I rise on a poin of order. இந்த அவையினுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை, தவிர்க்க முடியாத காரணத்தால் தேர்தல்கள் நடைபெறாத சூழ்நிலையில், குறைந்து வந்ததுபற்றி நாம் மிகுந்த கவலை கொண்டிருக்கிறோம். அது நம்மை மீறிய செயல் என்பதால், நடவடிக்கை எடுக்க இயலாமல் இருக்கிறோம். ஆனால் இடையில் ஏற்பட்ட காலியிடத்தை நிரப்ப அரசு நடவடிக்கை எடுத்து, அதிகார பூர்வமாக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏறத்தாழ ஒரு மாத காலம் ஆகியும் கூட, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இந்த அவைக்கு வரவில்லை. அவர் இன்னும் பதவிப் பிரமாணம்கூட எடுத்துக்கொள்ளவில்லை என்று தகவல். இந்த அவையில் நாம் இப்போது, வறட்சி நிலை பற்றியும் நிதிநிலை அறிக்கை பற்றியும், பல அவசரச் சட்டங்களைப் பற்றியும் இப்படித் தமிழகத்தோடு ஒட்டிய பல்வேறு முக்கியமான பிரச்சினைகளைப்பற்றியும் விவாதித்துக் கொண்டிருக்கும்போது, அவை விவாதங்களில் பங்கேற்று தமிழகத்திற்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்யாமல் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இருப்பது இந்த அவையைப் புறக்கணிக்கிற செயலாக இருக்கிறது. இந்த அவையின் முக்கியத்துவம் கருதி இது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

1981 மார்ச் 2]

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தலைவர் அவர்களே, இந்த அவைக்கு வந்து பதவிப் பிரமாணம் எடுத்து உறுப்பினராகச் செயல்பட வேண்டிய உறுப்பினரைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர் எத்தனை நாட்களுக்குள் வந்து பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விதிகள் இருக்கின்றன. அதற்கேற்ப பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளுவது என்பது அவருக்குள்ள உரிமை. அதை உள்நோக்கோடு, வேறுவிதமாகக் கருதிப் பேசுவது தவறு. ஆகவே அவர் வாராததால் இந்த அவையை அவமதிக்கிற மாதிரி சொல்லுவது தவறு. உறுப்பினருக்குள்ள உரிமையின்படி அவர் அந்தக் காலத்திற்குள் வந்து பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வார். திடீரென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு நாள் வரவில்லை என்றால், பிறகு முக்கியமான பிரச்சினை நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்ல வேண்டிய நிலை வரலாம். ஆகவே இது ஒரு ஒழுங்குப் பிரச்சினையாக வராது. அது உறுப்பினருக்குள்ள உரிமை. அந்தக் காலத்திற்குள் அவர் வந்து பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இந்தப் பிரச்சினையை எழுப்பியது எனக்கு வியப்பாக இருக்கிறது. ஒருவர் இந்த அவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், இவ்வளவு நாட்களுக்குள் வந்து பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று விதி முறை இருக்கிறது. அதற்குள் அவர் வராவிட்டால், இயற்கையாகவே அவருடைய பதவி காலாவதியாகிறது. அவ்வளவுதான் அவைத் தலைவரும், இந்த அவையும் அக்கறையைச் செலுத்த முடியும். அவர் எத்தனை நாள் கழித்து வருகிறார் என்பதைப்பற்றி அவைக்கு அக்கறையில்லை.

(முற்பகல் 11.00)

3. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள, கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்: